“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

# தமிழ்மொழி ஆண்டு 7

**நேரம்: 120 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி – 1

1. **சரியான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. மெய்யெழுத்துகளுள் வல்லினத்தொகுதியாக அமைவது

☐ ய் ர் ல் வ் ழ் ள் ☐ ஞ் ண் ந் ம் ன் ☐ க் ச் ட் த் ப் ற்

2. கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே. இதில் தோன்றாஎழுவாய்

☐ நீ ☐ கடமை ☐ செய்

3. குறட்பாக்களின் எண்ணிக்கை

☐ 133 ☐ 330 ☐ 1330

4. அரங்குகள் ஒளியாலும் வண்ணத்தாலும் கவின் செய்யப்படும். இதில் கவின் என்பது

☐ கவி ☐ அழகு ☐ திரை

5. பாம்பு சீறும் அதுபோல பல்லி

☐ பேசும் ☐ சொல்லும் ☐ கத்தும்

6. ஒரு பொருளின் செயலைக் காட்டும் சொல்

☐ பெயர்ச்சொல் ☐ வினைச்சொல் ☐ இடைச்சொல்

7. வேந்தன் குடிகளைக் காத்தான். இவ்வாக்கியம்

☐ தனிவாக்கியம் ☐ தொடர்வாக்கியம் ☐ வினாவாக்கியம்

8. ஓடுவான், பறப்பான், ஒற்றைக்காலில் நிற்பான். அவன்

☐ காளான் ☐ கொக்கு ☐ குடை

9. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்

☐ பாரதியார் ☐ இளங்கோஅடிகள் ☐ சக்திமுற்றப்புலவர்

10. 'உலகில் ஏற்றம்புரிய வைத்தாய் கண்ணம்மா…' எனப் பாரதியார் பாடினார். இதில் ஏற்றம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ வாட்டம் ☐ இறக்கம் ☐ உயர்வு

11. நண்பனுக்கு நண்பி போல இடையனுக்கு

☐ இடையள் ☐ இடைச்சி ☐ இடைய்ச்சி

12. சிறுவயதில் கற்கும் கல்வி என்றும் அழியாதது. இதனை விளக்கும் உவமைத்தொடர்

☐ நீர்மேற்குமிழிபோல ☐ அத்திபூத்தாற்போல ☐ கல்மேல்எழுத்துப்போல

13. ‘இடுக்கண் களைவதாம் நட்பு’ இதில் இடுக்கண் என்பது

☐ சிரிப்பு ☐ துன்பம் ☐ மகிழ்ச்சி

14. மாணவர்கள் சிறுவயதிலேயே நல்ல பழக்கவழக்கம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். இதில் பழக்கவழக்கம் என்பது

☐ இரட்டைக்கிளவி ☐ அடுக்குமொழி ☐ இணைமொழி

15. வாழ்த்துதல், விதித்தல், வேண்டுதல் போன்ற பொருள்களில் வரும் வாக்கியம்

☐ ஏவல்வாக்கியம் ☐ வியங்கோள்வாக்கியம் ☐ கூட்டுவாக்கியம்

16. தொழிலாளி தனக்குரிய வேலைகளை ஆறப்போட்டதால் அதிகாரி கோபமடைந்தார். இதில் ஆறப்போடுதல் என்னும் மரபுத்தொடர் குறிப்பது

☐ ஒழுங்குசெய்தல் ☐ காலந்தாழ்த்துதல் ☐ ஆறவைத்தல்

17. மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற செம்பைத் தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடப்பெறுவது

☐ காவடி ☐ கரகம் ☐ கும்மி

18. உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடலைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கலாம். இதில் சுறுசுறுப்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ ஆர்வம் ☐ சோம்பல் ☐ முயற்சி

19. வேலையிலிருந்து இளைப்பாறிய ஒருவருக்கு மாதாந்தம் வழங்கப்பெறும் பணம்

☐ ஓய்வூதியம் ☐ நட்டஈடு ☐ சன்மானம்

20. நண்பர்கள் கலைவிழாவில் ஆடிப்பாடினர். இதில் ஆடிப்பாடினர் என்பது

☐ பெயரெச்சச் சொற்றொடர் ☐ வினையெச்சச் சொற்றொடர் ☐ பெயர்ச்சொற்றொடர்

(20×1=20 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. கோல் + ஆட்டம் = ______________________
2. செம்மை + நெல் = ______________________
3. தெற்கு + மேற்கு = ______________________
4. நான்கு + குணம் = ______________________
5. தொழில் + கல்வி = ______________________
6. புகை + ஊட்டல் = ______________________

(6×1=6 புள்ளிகள்)

## 3. பிரித்தெழுதுக.

1. குறட்பா = ______________ + ______________
2. தமிழமுது = ______________ + ______________
3. வேனிற்காலம் = ______________ + ______________
4. கைவளையல் = ______________ + ______________
5. மட்பாண்டம் = ______________ + ______________
6. போர்ப்பறை = ______________ + ______________

(6×1=6 புள்ளிகள்)

## 4. கீழ்க்காணும் பழமொழிகளை நிறைவு செய்க.

1. அளவுக்கு மிஞ்சினால் ______________________________
2. சூடுகண்ட பூனை ______________________________
3. கரும்பு தின்னக் ______________________________
4. கோழி மிதித்துக் ______________________________
5. கூழுக்கும் ஆசை ______________________________

(5×1=5 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழின் முப்பெரும் பிரிவுகளும் எவை? (1 புள்ளி)

2. 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாண மன்னர் பயன்படுத்திய அரச இலட்சினை எது? (1 புள்ளி)

3. கட்டுரையின் மூன்று முக்கிய பகுதிகளும் எவை? (1 புள்ளி)

4. அடுக்கிடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு ஒன்று தருக. (1½ புள்ளிகள்)

5. ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் எவ்வாறு கழிக்கலாம்? (1 புள்ளி)

6. மக்களின் இயல்பான மொழிவழக்கும் பண்பாட்டுக்கூறுகளும் இடம்பெறும் இலக்கியம் எது? (1 புள்ளி)

7. கருத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்கியங்களை வகைப்படுத்துக. (1½ புள்ளிகள்)

8. சொற்புணர்ச்சி என்றால் என்ன? விகாரப்புணர்ச்சியின் வகைகளைத் தருக. (2 புள்ளிகள்)

**6. பொருத்தமான சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| மாந்தர்க்கு | கேண்மை | தரும் |
| அறிவு | துயரம் | மணற்கேணி |

1. தொட்டனைத் தூறும் ________________ ________________

   கற்றனைத் தூறும் ________________

2. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் ________________ கடைமுறை

   தான்சாம் ________________ ________________

(6×½=3 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதின் மகளிர் ஆதல் தகுமே;
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தமையன்,
யானை எறிந்து, களத்துஒழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்,
பெருநிரை விலக்கி, ஆண்டுப்பட் டனனே;
இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
செருமுக நோக்கிச் செல்க என விடுமே!

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?

   ________________________________

2. வீரத்தாயின் தமையன் எப்படி இறந்தான்?

   ________________________________

3. செருப்பறை என்றால் என்ன?

   ________________________________

4. வீரத்தாய் மகனை எங்கே அனுப்பினார்?

   ________________________________

5. அவர் தன் மகனை எப்படி அனுப்பினார்?

   ________________________________

6. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

   அ. காலப்பெயர் ________________

   ஆ. சினைப்பெயர் ________________

(6×1=6 புள்ளிகள்)

**8. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. கூத்து
2. தமிழ்மொழி
3. ஒற்றுமையே உயர்வு தரும்

(9 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நல்லொழுக்கம் என்பது தனக்கும், பிறருக்கும் பயனுள்ள வகையில் ஒழுகுதலே ஆகும். மாணவர்கள் முதலில் எத்தகைய ஒழுக்கமுறைகள் தனக்கும் சமூகத்திற்கும் பயனளிக்கும் என்பதைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். நற்பண்புகளைப் பெறுவதற்காக அறிவையும் ஆற்றலையும் பெறவேண்டும். ஒழுக்கமானது பல அறப்பண்புகளை உள்ளடக்கியது. அது ஒருவரின் நல்வாழ்வைத் தீர்மானிக்கிறது.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்' எனத் திருக்குறள் கூறுகின்றது.

மாணவர்களின் ஒழுக்கத்திற்குப் பெரும்பங்கு வகிப்பது பாடசாலைச் சூழல் ஆகும். அவர்களிடையே நல்லொழுக்கத்தை வளர்ப்பதே கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். நல்லொழுக்கம் இல்லை என்றால் சமூகத்துக்கோ நாட்டுக்கோ எப்பயனும் கிடையாது. எனவே நாம் ஒழுக்கமே முதன்மையானது என்பதைக் கருத்திற்கொண்டு நல்லொழுக்கத்துடன் வாழ்வோமாக!

1. ஒழுக்கம் எதனைத் தீர்மானிக்கின்றது?

_______________________________________________

2. நல்லொழுக்கம் என்றால் என்ன?

_______________________________________________

3. உயிரினும் மேலானதாகக் கருதப்பெறுவது எது?

_______________________________________________

4. கல்வியின் முக்கிய நோக்கம் எதுவெனக் கூறப்பெற்றுள்ளது?

_______________________________________________

5. மாணவனின் ஒழுக்கத்திற்குப் பெரும்பங்கு வகிப்பது எது?

_______________________________________________

(5×1=5 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லை வைத்து உரைப்பகுதியை நிறைவு செய்க.**

| | |
|---|---|
| ஆலோசனை | நோயின் வரலாற்றையும் |
| சுகவீனம் | காத்திருப்போர் அறை |
| குடும்பமருத்துவர் | சந்திப்பு நேரத்தை |
| நோய்களுக்கும் | |

________________________ சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யும் ஒரு பொது மருத்துவர் ஆவார். அவர் நம்பிக்கைக்குரியவரும் உங்களது நோயின் வரலாற்றினையும் தெரிந்து வைத்திருப்பவரும் ஆவார். அவர் எல்லா ________________________ சிகிச்சை அளிப்பார். அல்லது சிறப்பு வைத்திய நிபுணரிடம் உங்களைச் சிபாரிசு செய்வார். குடும்ப மருத்துவர் தேவைப்படும் போது ________________________ வழங்குவார். மருத்துவ உதவியாளரிடம் நீங்கள் தொலைபேசி மூலமாக ஆலோசனை பெறுவதற்கான ________________________ ஒழுங்கு செய்யலாம். உதவியாளர் நாளையும் நேரத்தையும் உங்களுக்கு அறிவிப்பார். நோயாளிகள் மருத்துவர் அழைக்கும் வரை வரிசையில் காத்திருக்க வேண்டும். அதுதான் வழக்கம். இவர்களுக்கு ________________________ ஒன்று உண்டு. மருத்துவர் பொதுவான கேள்விகளைக் முதலில் கேட்பார். எடுத்துக்காட்டாக: உங்களுக்கு என்ன ________________________? குடும்பமருத்துவர் முதலாவது சந்திப்பிலேயே அவர் உங்களது ________________________ உங்களது பெற்றோரின் நோயின் வரலாற்றையும் கேட்டு அறிந்து கொள்வார்.

(7×1=7 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. திருக்குறள் மனப்பாடம் செய்வதற்கு எளிதானது.

___

2. நாம் எல்லோருடனும் நட்புடன் இருப்போம்.

___

3. நான் விடுமுறைக்குச் சுற்றுலா சென்றேன்.

___

4. கலைவிழா பள்ளியில் நேற்று நடைபெற்றது.

___

5. நாம் உறவினருடன் கதைப்பதற்குத் தமிழ்மொழி கற்போம்.

___

6. நாம் கணினியில் எமக்குத் தேவையான தகவல்களைப் பெறுகிறோம்.

___

(6×½=3 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |